றுத்து விழிப்புணர்வு
வீடியோ மக்களை கவ

பலர் பங்கேற்றனர்.

# ராயல்கேர் மருத்துவமனையில் மரபணு பரிசோதனை ஆராய்ச்சி

கோவை, ஜூலை 14–

நவஇந்தியா, குறிஞ்சி மருத்துவமனையில் செயல்பட்டு வந்த, மரபணு பரிசோதனை மற்றும் கலந்தாய்வு பராமரிப்பு ஆராய்ச்சி நிறுவனம் (எம்.டி.சி.ஆர்.சி.,), நீலாம்பூர் ராயல்கேர் மருத்துவமனைக்கு மாற்றப்பட்டது.

எம்.டி.சி.ஆர்.சி., நிறுவன தலைவர் லட்சுமி கூறுகையில், ''உலகம் முழுவதும், 3,500 குழந்தைகளில் ஒரு ஆண் குழந்தைக்கு தசை சிதைவு நோய் ஏற்படுகிறது. உலகளவில் ஒப்பிடும்போது, தமிழகத்தில் இந்நோய் அதிகளவில் உள்ளது. மரபு வழியில் இந்நோய் ஏற்படுகிறது. ஆண் குழந்தைகளை மட்டும் தாக்கும் இந்நோய்க்கு இதுவரை மருந்து கண்டறியப்படவில்லை. நாம் கற்ற அறிவியலை சமுதாயத்துக்கு கொண்டு செல்வதே எம்.டி.சி.ஆர்.சி., நோக்கம்,'' என்றார்.

துவக்க விழாவுக்கு, ஆரிய வைத்திய பார்மஸி நிர்வாக இயக்குனர் கிருஷ்ணகுமார் தலைமை வகித்தார். 'கூகுள் ஹெல்த்' தலைவர் துஷ்யந்த் சின்ஹா ஜடாஜா, டாக்டர் ரித்தேஷ் நாராயண்பூர், ராயல்கேர் மருத்துவமனை நிறுவனர் மாதேஸ்வரன் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

Dinamalar - 14/7/19

தினமலர்